4 வார மினி தொடர்



# கடவுள் இறந்த தினம்!

செலுத்தப்பட்ட கேரம் ஸ்ட்ரைக்கரைப் போல திரையின் எல்லைகளில் மோதி மோதி திரும்பிக் கொண்டிருந்தாள் ஸ்க்ரீன் சேவர் புகைப்படத்தில் நிருபமா.

விரல் உத்தரவுக்கு கம்ப்யூட்டரும், பருகப்படுவதற்கு காஃபியும் காத்திருக்க... கைகளைக் கட்டிக் கொண்டு கமல்நாத் ஜன்னலுக்கு வெளியில் பறந்து தெரிந்து மறைந்து பறந்த காற்றாடியைப் பார்த்தார்.



பட்டுக்கோட்டை பிரபாகர்



"டாடி, இன்றாவது பட்டம் செய்து தருவீர்களா, மாட்டீர்களா?" பள்ளிச் சீருடையில் நிருபமா கேட்டாள்.

"நிரு, வெளியே புறப்படுகிறேன். சம் அதர் டே ப்ளீஸ்..."

அன்றைக்கு பட்டம் செய்து கொடுத்திருந்தால் நிருவிடமிருந்து கன்னங்களில் குழி விழ புன்னகையும் இரண்டு முத்தங்களும் கிடைத்திருக்கும். டாடி, பிக்னிக்? டாடி, ஸ்விம்மிங் பூல்? டாடி, ஷாப்பிங்? எத்தனை சம் அதர் டேஸ்!

"காஃபி குடித்தீர்களா இல்லையா?" மாதவராஜனின் குரல் அதட்ட... ஆடை உதட்டில் படிய, ஆறிய காபியைப் பருகியபடி, "அப்போதே!" என்றார்.

**"டாட்!** ஹவ் டு யூ சகிச்சிஃபை மாம்ஸ் காஃபி?" காஃபி டேயில் அவள் அறிமுகப்படுத்தப் போகிற ராம்குமாருக்காக காத்திருந்தபோது நிருபமா குளிர் கண்ணாடியை முன்னந்தலையில் செருகிக்கொண்டு கேட்டாள்.

"அதை நான் ஒரு கோப்பை காஃபியாகப் பார்ப்பதில்லை."

"பின்னே?"

"ஒரு கோப்பை அன்பு!"

"வாவ்! இதை அம்மாவிடம் சொல்லியிருக்கிறீர்களா டாட்?"

"இல்லை."

"ப்ளடி ஈகோ!"

"இல்லை. சொல்லாமலே அவளுக்குத் தெரியும். சொன்னால் நாடகத்தனமாக இருக்கும்."

அன்றைய இரவே பானுமதியின் கை பிடித்து நாடகத்தனமாக இருந்தாலும் பரவாயில்லை என்று சொல்லியிருந்தால்.. ரொம்ப வருடங்கள் கழித்து அவள் முகத்தில் வெட்கம் பார்த்திருக்கலாம். பெண் பார்க்கப் போனபோதும், கொசுவலைக்குள்

> **நான் கவனிக்காத லட்சம் பூச்சிகளை லட்சம் பல்லிகள் சாப்பிட்டுக் கொண்டுதான் இருக்கின்றன**

முதலிரவிலும் பார்த்த அவளின் வெட்க முகங்கள் நினைவில்லை.

**கோ**ப்பையை எடுக்க வந்த மாதவராஜ், "இன்னும் ஆரம்பிக்கவில்லையா?" என்றபடி செல்ல, "எங்கு துவங்குவது என்று யோசிக்கிறேன் மாதவ்!"

மாதவராஜ் போய் அவனது நீண்ட நிழல் சுவரை விட்டு விலகியதும் சுவரில் பூச்சியைப் பிடிக்கக் காத்துக் கொண்டிருந்த



பல்லி இரண்டு இஞ்ச் சத்தமில்லாமல் முன்னேறியதைப் பார்த்தார் கமல்நாத்.

பல்லியை விரட்டி பூச்சியைக் காப்பாற்றிவிட முடியும். பூச்சியின் உயிரைக் காப்பாற்றுவது புண்ணியம் என்றால் பல்லியின் உணவைப் பறிப்பது பாவத்தில் சேருமா? நான் கவனிக்காத லட்சம் பூச்சிகளை லட்சம் பல்லிகள் சாப்பிட்டுக் கொண்டுதான் இருக்கின்றன.

கமல்நாத்திற்கு தன் புத்தகத்திற்கான ஆரம்ப வரிகள் கிடைத்தது போல இருந்தது. எலியை அசைத்ததும் நிருபமா கரைந்து விட... ஆங்கிலத்தில் டைப் செய்யத் துவங்கினார்.

'பூச்சியைக் கவ்வக் காத்திருக்கும் ஒரு பல்லியின் பொறுமையுடன் நாங்கள் காத்திருந்தோம். நாங்கள் என்பது நானும் சதுர்வேதியும். சதுர் எனக்கு உடனடி மேலதிகாரி. ஆனால் என் உதட்டிலிருந்து சிகரெட் எடுக்கும் உரிமை நண்பன். இண்டெலிஜென்ஸ் பீரோவில் அவன் என்கிற அவர் அசிஸ்டெண்ட் சென்ட்ரல் இண்டெலிஜென்ஸ் ஆபீசர் கிரேடு ஒன்று. நான் கிரேடு இரண்டு.

நாங்கள் காத்திருந்தது டெல்லியில், டிசம்பர் குளிர் படுத்திக் கொண்டிருந்த இரவில். பரபரப்பான பாலிகா பஜாரில் தேநீர் சொல்லி, சுடச்சுட கட்லெட் கடித்த படி பிளாஸ்டிக் நாற்காலிகளில் அமர்ந்து மற்றவர்களின் பார்வையில் அரட்டை அடித்துக் கொண்டிருந்தோம். எங்கள் பார்வை அந்த எலெக்ட்ரானிக்ஸ் கடைக்கு வந்து போகிற நபர்கள் மேல் இருந்தது.

நாங்கள் பைஜாமா ஜிப்பாவில், கழுத்தில் மப்ளர் சுற்றி குரங்குக் குல்லா மாட்டி அடையாளம் மழுப்பியிருந்தோம். இருவர் இடுப்பிலும் விநாடியின் பாதிக்குள் எடுத்து, நிமிர்த்தி சுடும் தோதில் க்ளாக் 17 செமி ஆட்டோமெடிக் பிஸ்டல்கள்.

வந்த தகவல் சரியாக இருந்தால் எந்த விநாடியும் பூச்சி மாட்டலாம். பத்து தகவல்களில் ஒரு தகவல்தான் சரியாக இருக்கும். அதற்காக எதையும் அலட்சியப்படுத்த முடியாது. சதா ஆயத்த நிலையில் இருக்கும் தீயணைப்பு வீரனைப் போல, திடீரென்று வரப்போகிற ஆம்புலன்ஸுக்காக எமெர்ஜென்சி வார்டில் உட்கார்ந்து இணையத்தில் மேயும் டாக்டரைப் போல... காத்திருக்க வேண்ண்டியது

கடமை.

கவ்வப்பட வேண்டிய பூச்சியின் பெயர் சோமன். கம்ப்யூட்டர் சுத்தப்படுத்திக் கொடுத்த அவனின் மங்கலான புகைப்படம் எங்களிடம் இருக்கிறது. தவிர 16 வித மாறுவேடத் தோற்றங்களும் வைத்திருக்கிறோம். எல்லாவற்றிலும் துருத்தலாக மிஸ்டர் பீன்ஸ் அட்கின்சனை நினைவுபடுத்தும் வினோதமான மூக்கு!

சோமனை நாங்கள் டெல்லியில் எதிர்பார்க்கவில்லை. அவன் செயல்பாடுகள் பெரும்பாலும் மகாராஷ்ட்ராவில்தான். இரண்டு முறை மட்டுமே டெல்லிக்கு அவன் வந்து போயிருக்கிறான். இரண்டு முறையும் பயங்கரங்கள் நிகழ்ந்தன. முதல் முறை ஓடும் மெட்ரோ ரயிலில்! '14 பேர் பலி' என்று படித்திருப்பீர்கள். அதில் ஒரு பெண்ணுக்கு அடுத்த நாள் திருமணம். தன் மறுநாள் கணவனுடன் டிராவல்ஸ் வந்து சிங்கப்பூர் ஹனிமூன் செல்ல பேக்கேஜ் புக் செய்து விட்டுத் திரும்பும்போதுதான் குண்டு வெடித்தது.

உயிர் பிழைத்த அந்த மறு நாள் கணவனை ஆறு மாதம் கழித்து இந்தியா டுடே பேட்டி எடுத்தபோது, மருத்துவமனையில் இருந்த அவனுடைய புகைப்படம் போட்டிருந்தார்கள். அதில் அவன் காலில் சங்கிலி இருந்தது.

இரண்டாம் முறை ஒரு பொழுது போக்கு பூங்காவில். இந்த முறை 27 பேர்! 27 கதைகள்! தொலைக்காட்சியினர் மூன்று மாதத்திற்கு தூங்கவில்லை. மக்களையும் தூங்கவிடவில்லை. அப்பா, அம்மா, அண்ணன் என்று குடும்பத்தினரை விநாடியில் இழந்த நான்கு வயதுப் பெண் குழந்தை ஒப்படைக்கப்பட்ட அனாதை

**எனக்கு சம்மதமில்லை என்றால் என்ன செய்வதாக உத்தேசம்?**

இல்லத்தில் இன்னும் பேச்சு வராமல் இப்போதும் சிரிக்கிறது.

அந்த சோமன் இப்போது டெல்லியில்! ரயில் மற்றும் பூங்கா சம்பவங்களில் சேதாரங்களைச் சேகரிக்கச் சென்றவர்களில் நானும் ஒருவன். அந்தக் காட்சிகள்! விவரித்தால் குமட்டும்! நான்கு நாட்களுக்குத் தண்ணீர் குடிக்கக்கூட மனசு வராது.

எங்கோ ஒரு மூலையில் குவிந்திருக்கும் கோபத் திரட்டல்



வடிகால் தேடி ஒரு வெறி நாயாக நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு அலைகிறது. ஒரு நாய் அல்ல, பல நாய்கள்! பழக்கப்படுத்தப்பட்ட, பயிற்சி அளிக்கப்பட்ட நாய்கள். மூளைச் சலவை செய்யப்பட்டவை. ஏன் என்கிற கேள்வி நீக்கப்பட்டவை! திரி பற்ற வைக்கப்பட்ட வெடியின் கடமை வெடிப்பது மட்டுமே! நடுவில் நெருப்பை நிறுத்தி கேள்வி கேட்பதில்லை. அனுமதியும் இல்லை.

இந்த முறை வெறி நாய் எங்கே குதறப் போகிறது என்று தெரிய வேண்டும்! சோமனை சுட்டுத் தள்ளுவது அதி சுலபம். இதோ வரப் போகிறான். அவன்தானா என்பதை மட்டும் உறுதி செய்து கொண்டால் போதும். அடுத்த விநாடி அவன் இதயத்தைக் கொப்பளிக்கச் செய்துவிட முடியும்.

ஆனால் எங்களுக்கு அவன் முழுதாக வேண்டும். ஒரு சத விகித சேதாரமும் இல்லாமல் வேண்டும். அவன் மூளையில் பதுங்கியிருப்பவற்றைப் பிரதியெடுத்தாக வேண்டும்! இவன் சங்கிலியின் தொடர்ச்சி முனை அறிந்தாக வேண்டும். மீண்டும் ஒரு பயங்கரம் நிகழ விடக்கூடாது.

சதுர்வேதி பூட்ஸ் காலால் என் பூட்ஸ் காலைத் தட்ட... அவர் பார்வையைத் தொடர்ந்தேன்.

தூரத்தில் மக்கள் கூட்டத்தின் நடுவில் கறுப்பு பிளேசர் அணிந்து மெதுவாக நடந்து வந்து கொண்டிருப்பவன்... சோமன்தானே?

“**ச**ப்பாத்தி ரெடி சார். வருகிறீர்களா? கல் போடட்டுமா?” என்றான் மாதவராஜ். விரல்களில் நெட்டி முறித்தார் கமல்நாத். அவன் தன் கடமையை முடித்து இரண்டு பஸ் மாறி வீட்டுக்குப் போக வேண்டும். எழுந்து கொண்டார்.

டைனிங் மேஜையில் பீங்கான் தட்டில் தேங்கிய தண்ணீரை உதறி வைத்துக் கொண்டார்.

**கா**ஃபி டேயில் ராம்குமார் ஃபிங்கர் பவுல் மறுத்து, வாஷ் பேசினில் கைகழுவி வந்தது நினைவுக்கு வந்தது. நிருபமா டிஸ்யூ காகிதம் நீட்டினாள்.

“அதிர்ச்சியடையாமல் பதில் சொல்வாயா ராம்? எனக்கு சம்மதமில்லை என்றால் என்ன செய்வதாக உத்தேசம்?” என்றார் கமல்நாத்.

“ஹைபதட்டிகல் கேள்விகள் எனக்குப் பிடிக்காது சார்.”

“இது என் கேள்வியைப் பற்றிய விமர்சனம். எனக்கு வேண்டியது

பதில்!"

"சத்தியமாக தற்கொலை செய்வதாக உத்தேசமில்லை. ரகசியமாக ஓடிப்போ சான்ஸ்! பெற்றவர்களின் ஆசி இல்லையென்றால் சீரழிவோம் சார்! நான் உங்கள் ஜாதி இல்லை என்பதைத் தவிர... உங்கள் மனதில் உள்ள மருமகனின் தகுதிகளில் ஏதாவது என்னிடம் குறைகிறதா சார்?"

"ஜாதி? நிச்சயமாக இல்லை. அமெரிக்கா போகிறேன்

**ஸ்கைப்பில் கையைப் பொத்தி கதகதப்பை உணர முடியுமா ராம்?**

என்கிறாயே! நிருபமா எங்களுக்கு ஒரே மகள் ராம்! நான்கு தினங்கள் கல்லூரி டூர் தவிர பிரிந்ததில்லை."

"இணையம் இருக்கிறது. ஸ்கைப் இருக்கிறது. இது 2013 சார்!"

"ஸ்கைப்பில் கையைப் பொத்தி கதகதப்பை உணர முடியுமா ராம்? கண்ணீரைத் துடைக்க முடியுமா ராம்?"

"சினிமா வசனம் சார்!"

"நான் எமோஷனல் இடியட் என்றே வைத்துக் கொள்வேன்! ராம், நான் உன்னை நிராகரிக்கவில்லை. நிராகரிக்க முடியாது. நிருபமா தேர்வு செய்தவன் நீ. அவள் முட்டாள் இல்லை. ஆனால்... கொஞ்சம் அவகாசம் கொடேன்."

"எதற்கான அவகாசம் சார்?"

"நீளமான பிரிவுக்கு மனதை தயார்ப்படுத்திக் கொள்ள."

**உ**டனடியாக கை குலுக்கி அடுத்த வாரமே பதிவுத் திருமணம் செய்து விமான நிலையத்தில் கண்ணீருடன் கையசைத்து வழியனுப்பிருக்க வேண்டுமா? ஆமாம். செய்திருக்க வேண்டும்! என்ன ஒரு செண்ட்டிமெண்ட்டல் கிறுக்கன் நான்!

சப்பாத்தி சாப்பிட்டதும் ஒரு சிகரெட் பிடித்தார் கமல்நாத். (புகை பிடிப்பது உடல் நலத்திற்குக் கேடு! Smoking is injurious to health)

மாதவராஜ் மாத்திரைகளையும், கிளாஸில் தண்ணீரையும் வைத்துச் சென்றதும் கமல்நாத் மீண்டும் டைப் செய்யத் துவங்கினார்.

**சோ**மன் அந்த எலெக்ட்ரானிக்ஸ் கடையை சமீபிக்க... சதுர்வேதியும் நானும் எழுந்து கொண்டோம். மெதுவாக அவனை நோக்கி நடந்தோம்.

**(தொடரும்)**


2



மினி தொடர்



# கடவுள் இறந்த தினம்

**எங்கள் அலுவலகத்தின் தற்காலிக சிறைப் பகுதி நோக்கி சதுர்வேதியுடன் வழியில் வணக்கங்களை தலையசைப்பில் ஏற்றபடி நடந்து கொண்டிருந்தேன்.**

"சோமன் ஒரு முரட்டு நரி! ஒரு வார்த்தை வராது கமல்நாத்!"

"வரவழைத்தாக வேண்டும். இன்று நமக்கு ஒரு சவால் தினம்" என்றேன்.

விசாரணைக்கான பிரத்தியேக அறைக்கு நாங்கள் சென்று உத்தர விட்டதும், கைகள் பின்புறம் வைத்து விலங்கிடப்பட்ட சோமனை அழைத்து

**பட்டுக்கோட்டை பிரபாகர்**

வந்து எதிரில் அமர்த்திவிட்டு துப்பாக்கி ஏந்திய காவலாளிகள் தள்ளி நின்று கொள்ள... எனக்குக் கீழே இயங்கும் மேத்திவ் நீட்டிய ஃபைலில் டைப் செய்யப்பட்ட முதற்கட்ட விசாரணை விவரங்களைப் படித்தேன்.

'நடக்கவிருக்கும் இந்தியா -இங்கிலாந்து கிரிக்கெட் போட்டியைப் பார்க்க வந்தேன்' என்று சோமன் சொல்லியிருந்த பதிலைப் பார்த்துவிட்டு வாய்விட்டுக் சிரித்து விட்டேன்.

"சோமன், உனக்கு இத்தனை நகைச்சுவை உணர்வா? எப்போது கிரிக்கெட் ரசிகனானாய் நீ?" என்றேன் இந்தியில்.

சோமன் அடிக் கண்களால் வெறுப்புடன் எங்களைப் பார்த்தான்.

"ஏன்... நான் கிரிக்கெட் பார்க்க வரக்கூடாதா?" என்றான் கரகரப்பாக.

**அப்பாவி மனிதர்களைக் கொல்வதில் உறுத்தல் இல்லையா?**

"சோமன்... போதும் விளையாட்டு. நீ பேசத் துவங்குவது நல்லது."

"என்னைக் கைது செய்திருக்கிறீர்களா?"

"ஓ! சட்டம் பேசுகிறாயா? கோர்ட்டில் ஆஜர்படுத்த வேண்டுமா? அதெல்லாம் மனிதர்களுக்கு! உன்னை அந்தக் கணக்கில் சேர்ப்பதாக இல்லை."

"சரி.. எப்போது கொல்லப் போகிறீர்கள்?"

"பயமாய் இருக்கிறதா சோமன்?"

"பயம்? ஆமாம். இருந்தது. இருபது வருடங்களுக்கு முன்பாக."

"உன் மரணத்திற்காக கண்ணீர் விட ஒரு நாய்க்குட்டிகூட இல்லை என்பதை அறிவாயா? எங்களுக்கு மெடல் குத்துவார்கள்."

"குத்திக்கொள்ள வேண்டியதுதானே? ஏன் தாமதம்?"

"சோமன், காசுக்காக கண்மூடித்தனமாக அப்பாவி மனிதர்களைக் கொன்று குவிப்பதில் உனக்கு உறுத்தலே இல்லையா? உனக்கென்று ஒரு கொள்கையும் கிடையாது. நீ ஒரு கருவியாக பயன்படுத்தப்படுகிறாய். துப்பாக்கி மாதிரி... வெடிகுண்டு மாதிரி.. நீயும் ஒரு ஆயுதம். மூளையுள்ள



ஆயுதம். தப்பு. மூளை இருந்தும் அதைப் பயன்படுத்தாத ஆயுதம். எல்லா நாடுகளிலும் நீ சேமித்து வைத்திருக்கும் பணம் இந்த நிமிடம் உன்னைக் காப்பாற்றுமா சோமன்?"

"விலங்கினை நீக்கினால் கை தட்டுவேன் ஆபீசர். நல்ல பயிற்சி!"

"உன் கேலியால் நான் கோபப்பட மாட்டேன்."

"உங்கள் அருளுரையால் நான் புத்தனாகிவிடவும் மாட்டேன்."

"கூலிப்படை நாயே! என்ன திமிரடா உனக்கு?"

எழுந்து சென்று தன் பூட்ஸ் காலால் சதுர்வேதி அவன் முகத்தில் உதைக்க... உட்கார்ந்திருந்த நாற்காலியோடு அவன் கவிழ்ந்தான். காவலாளிகள் ஓடி வந்து நிமிர்த்தினார்கள். அவனின் கிழிந்த உதடுகள் ரத்தக் கசிவுடன் புன்னகைத்தன. நான் சதுர்வேதியை இழுத்து உட்கார வைத்தேன்.

"சதுர்! வேண்டாம்! நம்மை உணர்ச்சிவசப்பட வைப்பதுதான் அவன் நோக்கம்! இவனை காயப்படுத்துவதால் அரசாங்கத்துக்குத்தான் மருத்துவச் செலவு!"

ஒரு கேவலமான கெட்ட வார்த்தையை உதிர்த்துவிட்டு சதுர்வேதி வேகமாக வெளியே சென்று கதவை டபாரென்று சாத்தினார். சோமனை நூறு துண்டுகளாக வெட்டும் ஆத்திரம் என்னிடமும் இருந்தது. அதை சாதுர்யம் என்கிற போர்வை போட்டு மூடி வைத்திருந்தேன்.

"சோமன், நார்கோடிக்ஸ் பயன்படுத்துவது எனக்குப் பிடிக்காத விஷயம். உன் விஷயத்தில் எனக்கு வேறு வழியில்லை. சோடியம் பெண்டத்தால் போடச் சொல்கிறேன். அப்போது நீ பேசுவாய்" என்று எழுந்துகொண்டு மேத்திவிடம், "ஏற்பாடு செய்துவிட்டு அழையுங்கள்" என்று வெளியே நடந்த போது...

கமல்நாத் டைப் செய்வதை நிறுத்தி தண்ணீர் குடித்தார். கொட்டாவி வந்தது. சிஸ்டத்தை அணைத்தார். கட்டிலில் படுத்து கம்பளி போர்த்தி கண்களை மூடினார்.

அன்று சோமனை நார்கோ

## மினி தொடர்

அனாலிஸ் செய்ய தயார்படுத்தச் சொல்லிவிட்டு வராந்தாவில் நடந்தபோதுதானே நிருபமா போனில் அழைத்தாள்?

"என்ன நிரு?"

"ராம்குமார் இன்னும் ஒரு முறை உங்களை சந்திக்க வேண்டும் என்று..."

"அமெரிக்க வேலையை மறுத்து விட்டானா?"

"இல்லை. அது உறுதியான விஷயம். விசா ஏற்பாடுகள் நடக்கின்றன."

"எனில் சந்திப்பது அனாவசியம். வாழ்த்துக் குறுஞ் செய்தி அனுப்பட்டுமா?"

"டாடி! நல்ல மனநிலையில் இல்லையா நீங்கள்?"

"ஆமாம். நிகழப் போகிற ஒரு பயங்கரம் பற்றி எதுவும் அறியமுடியாத கையாலாகாத கோபத்தில் இருக்கிறேன். நல்ல மனநிலையில் இருந்தாலும் இதைத்தான் சொல்லியிருப்பேன்!"



"அநியாயத்திற்குப் பிடிவாதம்!"

"அநியாயத்திற்கு பாசம் என்றும் இன்னொரு பொருள் உண்டு."

"நான் உங்களுடன் பேச வேண்டும். இரவு எத்தனை மணிக்கு வருவீர்கள்?"

"தெரியாது" என்று கட் செய்தது நினைவுக்கு வந்தது.

வந்த உறக்கம் சட்டென்று கலைந்து போனது. கமல்நாத் இப்படி புரண்டார். அப்படி புரண்டார். எழுந்து சிஸ்டம் ஆன் செய்து மீண்டும் டைப் செய்யத் துவங்கினார்.

'ஜேடிடி' என்று நாங்கள் அழைக்கும் ஜாயிண்ட் டெபுடி டைரக்டரின் அறையில் நான், சதுர்வேதி மற்றும் எங்கள் குழுவினர் கூடியிருந்தோம்.

ஜேடிடி மிருதுளாவுக்கு ஐம்பதை நெருங்கும் வயது. பாப் செய்யப்பட்ட தலை. கழுத்தில் மட்டும் ஒரு மெலிதான சங்கிலி. காதுகளில் அணிவதில்லை. வலது கையில் எங்கள் ஒரு ஆபரேஷனின்போது இழந்த இரண்டு விரல்கள் இல்லாமையைக் காட்சிப் பொருளாக்க விரும்பாமல் கிளவுஸ். ஆனால் கிளவுஸின் இரண்டு விரல்கள் கையசைத்துப் பேசும்போது தனியாக ஆடும்.

மேஜை முழுக்க பிளாட்பார வியாபாரி மாதிரி பல விதமான பொருள்களை அடுக்கி வைத்திருந்தோம்.

லெதர் பேக். சிறிய டர்க்கி டவல். சிகரெட் பெட்டி. அதில் மூன்று சிகரெட்டுகள். லைட்டர். முன்பதிவு செய்யாத மூன்று ரயில் டிக்கெட்டுகள். ஒரு நகைக் கடையின் தள்ளுபடி நோட்டீஸ். தலைவலி மாத்திரை அட்டையில் கிழித்தவை போக ஐந்து. பாலிகா பஜாரில் அந்த எலெக்ட்ரானிக்ஸ் கடையின் விலாச அட்டை. டெல்லி நகரத்தின் மேப். 'பேபிஸ் டே அவுட்' எனும் திரைப்படத்தின் டிவிடி - எல்லாம் கைது செய்தபோது சோமனிடமிருந்து கைப்பற்றப்பட்டவை.

"இவற்றை வைத்து என்ன செய்திகள் சேகரித்திருக்கிறீர்கள்?"

இரண்டு வார்த்தைகளில் என்றால் தானே பேசும் சதுர் இரண்டு பாராக்களில் பேச வேண்டும் என்றால் என்னைப் பார்ப்பது வழக்கம். நான் துவங்கினேன்.

"மேடம்... வந்திருப்பது மூன்று பேர். கரோல்பாகில் இருக்கிறது திவா ஜுவல்லர்ஸ்! அவர்களின் கடைக்கு அருகில்தான் இந்த நோட்டீஸ் விநியோகிக்கப்பட்டிருக்கிறது.

> **பதினேழுபேரில் ஒருவனது கைரேகை ஒத்துப் போகிறது!**

ஆக அந்தப் பகுதியில் சுற்றியிருக்கிறார்கள். அங்கே பிளாட்பாரக் கடையில் டிவிடி வாங்கி இருக்கிறான். டிவிடி பாக்ஸில் எடுத்த கைரேகைகளில் ஒன்று அங்கே இருக்கும் பதினேழு வியாபாரிகளில் ஒருவனின் ரேகையோடு ஒத்துப் போகிறது. அவனை விசாரித்ததில் சோமனுடன் இரண்டு பேர் இருந்ததை உறுதி செய்கிறான். வேறு உபயோகமான தகவல் எதுவுமில்லை."

"சரி. அந்த எலெக்ட்ரானிக்ஸ் கடைக்காரன் என்ன சொல்கிறான்?"

"அவனைத் துருவியாகி விட்டது. சோமனைப் பற்றி கேள்விப்பட்டதுகூட இல்லை என்கிறான். தன் கடையின் கார்டை அவனுக்கு யாராவது தந்திருக்கலாம் என்கிறான். கடையில் சட்ட விரோதமான பொருள்கள் எதுவும் இல்லை."

"சோமனுடன் வந்த இரண்டு பேர் வெளியே இருக்கிறார்கள்.



அவர்கள் மீடியாவுக்கு சொல்லலாம். கேள்விகள் வரத் துவங்கும் முன் அவனை கோர்ட்டில் நிறுத்தியாக வேண்டும்."

"ஒரு நாள் டைம் கொடுங்கள், மேடம்."

"நான் டைரக்டரிடம் நிலமையை விளக்கி டெல்லி கமிஷனருக்கு அலர்ட் தகவல் தந்தாகி விட்டது. அந்த இருவரையும் தேடும் பணி முடுக்கிவிடப் பட்டுள்ளது. சரி, என்ன எதிர்பார்க்கிறீர்கள்?"

"மற்றும் ஒரு பயங்கரம்! டெல்லியில் எங்கோ ஒரு இடத்தில் வெடிக்கலாம்."

"சோமன் இல்லாவிட்டாலும் அவர்கள் செயல்படுத்துவார்களா?"

"தெரியாது. அவர்களுக்கான உத்தரவு அப்படியும் இருக்கலாம்."

"சோமன் இப்போது நம் வசம்! அவனிடம் நடைபெறப் போகும் பயங்கரம் பற்றிய தகவல் இருக்கிறது. சதுர், கமல்... ஏதாவது செய்யுங்கள்" என்ற மிருதுளாவின் கண்கள் திடீரென்று விரிந்தன!

"ஹேய்! அவன் எதற்காக இந்த டிவிடி வாங்கினான் என்று யோசித்தீர்களா? இது குழந்தைகள் படம்! நகைச்சுவைப் படம்! சோமன் நிச்சயமாக இதை தான் பார்த்து ரசிக்க வாங்கியிருக்க மாட்டான்! யாரோ ஒரு குழந்தைக்காகத்தான் இதை வாங்கியிருக்க வேண்டும்!"

எனக்கும் உள்ளே பல்சக்கரங்கள் சுழன்றன.

"ஆறு மாதம் முன்பாக மும்பையில் அவனை பார்கவி என்கிற பல் டாக்டருடன் பார்த்ததாக தகவல் வந்து மும்பை போலீஸ் பார்கவியை சக்கையாக விசாரித்தது. அவள் வீட்டில், கிளினிக்கில் சோதனையிட்டதில் எதுவும் கிடைக்கவில்லை. மனித உரிமையாளர்கள் பார்கவிக்காக வழக்காடி அவள் விடுதலையானாள்" என்றேன்.

"பார்கவிக்கு நான்கு வயதில் ஒரு மகள் உண்டு. அவள் ஒரு டைவர்சி" என்றார் சதுர்வேதி.

அடுத்து என்ன செய்ய வேண்டும் என்று எங்களுக்கு தெளிவாகப் புரிந்தது.

**(தொடரும்)**



# கடவுள் இறந்த தினம்!



**சோமனின் இதயத் துடிப்பையும், ரத்த அழுத்தத்தையும் கண்காணிக்கும் கருவிகள் பொருத்தப்பட்டிருக்க, அருகில் நின்ற டாக்டர் அவன் இமைகளைப் பிரித்துப் பார்த்தார். ஸ்டெத் வைத்து சோதித்தார். 'கேட்கலாம்' என்பதாக தலையசைத்தார்.**

என் டேப்லெட் கம்ப்யூட்டரை ஆன் செய்தேன். அவனுக்கு மிக அருகில் நாற்காலியை நகர்த்திக் கொண்டு கன்னத்தில் தட்டினேன்.

"சோமன்... இது யார் தெரிகிறதா?"

பெண்ட்டதால் போதையுடன் பார்த்தான். கண்களின் பாப்பாக்கள் விரிவதை மிக க்ளோசப்பில் தூரத்தில் பதுங்கியிருந்த கேமரா பதிவு செய்தது.

"தெரியாது" என்றான். நாக்கு மக்கர் செய்யத் துவங்கியது.



**பட்டுக்கோட்டை பிரபாகர்**


3



"உன் லேட்டஸ்ட் காதலியைத் தெரியவில்லையா? சரி, இது?"

பார்கவியின் நான்கு வயது குழந்தை அதிதியின் புகைப்படம் பார்த்தபோதும் அதிர்ந்து, ஆனால் அதிர்வை சிரமப்பட்டு மறைத்தான்.

"உன் காதலியையும், ஜில்பிக் குட்டியென்று நீ செல்லமாய் அழைக்கும் உன் வளர்ப்பு மகளையும் எங்கள் உத்தரவின் பேரில் மும்பை போலீஸ் ஒரு ரகசிய இடத்தில் வைத்து விசாரிக்கிறது சோமன். உன் உடம்பில் உள்ள மச்சத்தையும் சொல்லலாம். உன் மனதில் உள்ள திட்டத்தையும் சொல்லலாம். சொல்ல வைக்க இரண்டாயிரம் வழிகள் வைத்திருக்கிறோம். உன் மன உறுதி அவர்களிடமும் இருக்குமா சோமன்?"

சோமன் உச்சமான வெறுப்புடன் என்னையே பார்த்தான். பத்து, இருபது, முப்பது விநாடிகள் என்று நீண்டு இரண்டு நிமிடங்கள் பார்த்தான்.

"அவர்களை விட்டுவிடுங்கள்."

"பின்னே வெட்டி ஊறுகாய் போட்டு சாப்பிடவா போகிறோம்? விடுவோம்- நீ பேசிவிட்டால்."

"இது எமோஷனல் ப்ளாக்மெயில்!"

"உனக்கு எமோஷன் இருக்கிறதா என்ன? ஆச்சரியம்! காசுக்காக உயிர்களைக் குடிக்கிற உனக்கு காதல், பாசம் இதெல்லாம் வந்திருக்கக் கூடாது சோமன். எங்கள் வேடத்தில் நீங்கள் தப்பு செய்வதில்லையா? உங்கள் வழிமுறையில் அதை நாங்கள் சரிசெய்ய வேண்டியிருக்கிறது. கமான், பேசு."

"இனி நான் என்ன பேசினாலும் பிரயோஜனமில்லை. திட்டம் செயல்படத் துவங்கிவிட்டது கமல்நாத்."

அவன் என் பெயரைச் சொன்னது எனக்கு ஆச்சரியமாக

**“ எங்கள் ஜாதகம் உங்கள் வசம் என்றால்... உங்கள் ஜாதகமும் எங்கள் வசம்! ”**

இருந்தது.

"எங்கள் ஜாதகம் உங்கள் வசம் என்றால்... உங்கள் ஜாதகமும் எங்கள் வசம் கமல்நாத்! உங்கள் சமையல்காரன் மாதவராஜ். மகள் நிருபமா காதலிக்கிறாள். அவன் பெயர் ராம்குமார். உங்கள் மனைவி பானுமதிக்கு மூன்று மாதம் முன்பாக கர்ப்பப் பை நீக்கப்பட்டது. தகவல்கள் சரியா?"

"ஸ்மார்ட்" என்றேன். "சரி...

"என்ன செய்ய வந்தீர்கள்?"



"விவசாயமா செய்ய வருவோம்? இந்த முறை சேதம் கொஞ்சம் அதிகம் எதிர்பார்க்கிறோம்."

"எப்போது? எங்கே?"

"பார்கவியும், அதிதியும் வீட்டிற்கு அனுப்பப்பட வேண்டும். பாதுகாப்பாக இருக்கிறோம் என்று அவர்கள் என்னிடம் பேச வேண்டும். பிறகு சொல்கிறேன்."

"முதலில் சொல்!"

"முடியாது" என்று கண்களை மூடிக் கொண்டான்.

பிறகு எந்தக் கேள்விக்கும் அவன் பதில் சொல்வதாக இல்லை. பிடிவாதமாக மௌனம் சாதித்தான்.

சதுர்வேதியின் அறையில் விவாதித்தோம்.

"பார்கவி வீட்டில், கிளினிக்கில் ஒரு துப்பும் கிடைக்கவில்லை. பார்கவிக்கு சோமனின் திட்டம் எதுவும் தெரியவில்லை. இந்தச் சூழ்நிலையில் அவனுடைய நிபந்தனைக்குக் கட்டுப் படுவதைத் தவிர வேறு வழியில்லை" என்றார் சதுர்வேதி.

"அவர்களை விடுவித்த பிறகும் இவன் உண்மையைச் சொல்வான் என்று என்ன நிச்சயம்?" என்றேன்.

"நமக்கு வேறு வழி ஏதாவது இருக்கிறதா கமல்நாத்?" நான் இல்லை என்று தலையசைத்து, "எனக்கு ஒரு டீ குடிக்க வேண்டும்" என்று நடந்தேன்.

காண்டீனில் டீ எடுத்துக் கொண்டு அமர்ந்து யோசித்தேன். என்னைப் பற்றிய எல்லா தகவல் களும் சோமன் சொன்னது மனதை அரித்தது.

உறக்கம் ஆதிக்கம் செய்யத் துவங்க, விரல்கள் தவறுகளுடன் டைப் செய்ததால் நிறுத்திக் கொண்டு சிஸ்டத்தை அணைத்தார் கமல்நாத். இரவு விளக்கு மட்டும் அமைத்து கம்பளிக்குள் புகுந்தார்.

அதிகாலை ஐந்து மணிக்கு பனி மூட்டத்தின் நடுவில் உல்லன் குல்லாய் அணிந்துகொண்டு ஜாம் நகர் மதர் தெரஸா கிரெஸண்ட் பகுதியில் கைகளை வீசி நடந்தார் கமல்நாத். அரை மணிக்குப் பிறகு பறவைகள் சத்தமிடும் தல்கடோரா தோட்டத்தில் சலவைக்கல் பெஞ்சில் அமர்ந்து புதிய பூக்களைப் பார்த்தார்.

அன்று பானுமதி இதே இடத்தில் வாதிட்டபோதும்





இதே போல பூக்கள் சிரித்துக் கொண்டிருந்தன.

“ராம்குமாருக்கு சிகரெட், மதுப் பழக்கம் கூட இல்லையாம்.”

“எனக்கில்லையா? அதுவல்ல பிரச்னை பானு. ஏன் அமெரிக்கா? இந்தியாவில் என்ன இல்லை?”

“அமெரிக்காவில் வேலை என்பதை அதிர்ஷ்டமாக நினைக்கிறார்கள்.”

“அறியாமை! அலட்சியம்! ஒரு வகையில் துரோகம்! ராம்குமார் வளர்ந்தது இங்கே! படித்தது இங்கே! உழைக்கப் போவது அமெரிக்காவில், எனக்கு இதுதான் பிடிக்கவில்லை. நான் நினைத்திருந்தால் இருபது வருடங்கள் முன்பாக லண்டனில் செட்டிலாகியிருக்க முடியும். வந்த வாய்ப்பை மறுப்பதற்கு மூன்று விநாடிகள்தான் நான் எடுத்துக் கொண்டேன்.”

“உங்கள் கொள்கைகளை ஏன் அவர்கள் மேல் திணிக்கிறீர்கள்? பெற்றவர் என்பதால் இமாலய உரிமை வந்துவிடுமா? ஆறு மாதமாக உங்கள் சம்மதத்திற்காக பொறுமையாக இருக்கிறார்கள். இரண்டு பேரும் மேஜர். சொல்லாமல் சென்று பதிவுத் திருமணம் செய்து கொள்ளத் தெரியாதா அவர்களுக்கு? சரி, உங்களுக்கு சம்மதமில்லை என்று இவள் பிரிந்துவிட்டால் அது காதலுக்கு செய்கிற துரோகம் இல்லையா? அது மட்டும் சரியா?”

“இரண்டு நாள் அவகாசம் கொடு. ஒரு முடிவுக்கு வந்துவிடுகிறேன்.”

“அதென்ன இரண்டு நாள்? யாராவது சித்தர் வர வேண்டுமா?”

“டெல்லியில் மீண்டும் ஒரு பயங்கரம் நிகழ சதித் திட்டம் நடக்கிறது. அதைத் தடுப்பதில் மும்முரமாக இருக்கிறோம். விவகாரம் முடிவுக்கு வந்து விட்டால் கொஞ்சம் நிம்மதியாக யோசிக்க முடியும்.”

“யோசிக்கிறேன் என்று சொன்னதற்கே நிரு சந்தோஷப் படுவாள்.”

பானுமதி புன்னகைத்தபோது பூக்கள் அசைந்தது அந்தப் புன்னகைக்குக் கைதட்டுவதைப் போல இருந்தது.

கமல்நாத் வீடு திரும்பி குளித்து, செய்தித்தாள் படித்து, டிவியில் செய்திகள் மேய்ந்து சிஸ்டத்தில் அமர்ந்து, விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தார்.

சதுர்வேதி சொன்னது போல எங்களுக்கு வேறு வழியில்லை.



டெல்லி போலீஸுக்குச் சொல்லி, பார்கவியையும், அதிதியையும் விடுவித்து அவர்களின் வீட்டில் சேர்த்து வீடியோ செட்டில் சோமனுடன் பேச வைத்தோம்.

"பார்கவி, உங்களை அடித்தார்களா?" என்றான் சோமன்.

"இல்லை. என்னை மிரட்டினார்கள். அதிதியை பொம்மை கொடுத்து, சாக்லேட் கொடுத்து விசாரித்தார்கள்" என்றாள் பார்கவி தன் வீட்டிலிருந்து.

"என்னைப் பற்றி கவலைப்படாதே! நான் சொன்னபடி செய்."

**"நிரு, இப்போது நீ எங்கே இருக்கிறாய்?"**

தொடர்பைத் துண்டித்து, "பார்கவியை என்ன செய்யச் சொன்னாய்?" என்றேன்.

"அது பர்சனல். உங்களுக்கு எங்கள் திட்டம் தெரிய வேண்டும். அதுதானே? மாலை ஆறு மணிக்குக் கேளுங்கள். விரிவாக சொல்லி விடுகிறேன்."

மாலை ஆறு மணிக்குக் கேட்டேன், "உங்கள் திட்டம் எங்கே? எப்போது?"

"லஜ்பத் நகரில்! சாளுக்கியா மால் தெரியுமா? 24 எஸ்கலேட்டர்ஸ்! 1500 கடைகள்! இந்த மாலுக்கு வந்து போகிறவர்கள் ஒரு நாளைக்கு 70,000 பேர்! ANFO! அப்படித்தானே அழைப்பீர்கள்? 160 பவுண்ட் அம்மோனியம் நைட்ரேட் பயன்படுத்தி வடிவமைக்கப்பட்ட பாம்! ஒரு செல்போன் அழைப்பில் வெடிக்கப் போகிறது!"

"எப்போது?"

"இன்றே வெடிக்கலாம். இப்போது டைம் ஆறா? இன்னும் அரை மணியில் கூட வெடிக்கலாம்."

சோமனின் சிரிப்பில் இருந்த பயங்கரம் என்னை உலுக்க... சட்டென்று எழுந்து கொண்டேன்.

"ஒரு நிமிடம் கமல்நாத்! நிருபமா இப்போது எங்கே இருக்கிறாள் என்று தெரியுமா?" என்றான் சோமன்.

விரல்களின் நடுக்கம் மறைத்து நிருபமாவை அழைத்தேன், "நிரு இப்போது நீ எங்கே இருக்கிறாய்?"

"நீங்கள்தானே உடனே வரச்சொல்லி போன் செய்தீர்கள்? நானும், அம்மாவும் உங்களுக்காக சாளுக்கியா மாலில் காத்திருக்கிறோம் டாடி" என்றாள் நிருபமா.

**(தொடரும்)**

"நிரு! நானா? நான் எங்கே உன்னை அழைத்தேன்? இருவரும் உடனே அந்த மாலை விட்டு வெளியே வாருங்கள்" என்றேன் அவசரமாக.

"என்ன? என்ன சொல்கிறீர்கள்? இங்கே ஒரே இரைச்சலாக இருக்கிறது. கேட்கவில்லை டாடி" என்றார் நிருபமா, "டாடி... டாடி... ஏய்! ஏய்! நீ... யார்? என்ன வேண்டும் உனக்கு நோ!"

தொடர்பு துண்டிக்கப்பட்டது. சோமன் வாய்விட்டுச் சிரித்து, "ஆபீஸர், நிருபமா கையிலிருந்து போன் பறிக்கப்பட்டிருக்கும்! முப்பது நிமிடங்கள் அவகாசம் இருக்கிறது உனக்கு. முடிந்தால் விளையாடு!"

# கடவுள் இறந்த தினம்








# பட்டுக்கோட்டை பிரபாகர்

எனக்கு ரத்தம் கண்களில் பாய, அவனை மறுபடி மறுபடி அறைந்து, "சொல்! அந்த மாலில் பாம் எங்கே வைக்கப்பட்டிருக்கிறது?" என்று கத்தினேன்.

"என் கழுத்தை நெரி! ஆசன வாயில் ஐஸ்கத்தி செருகு! மின் சாரம் பாய்ச்சு! நெருப்பால் சுடு! இதயத்தில் புல்லட்டை செலுத்து பதில் கிடைக்காது!"

"சேர்மன் ஒரு போன் செய்தால் போதும்! உன் பார்கவியையும், அதிதியையும் ஒரு கோரமான சாலை விபத்தில் சிக்க வைக்க முடியும்! போன் செய்யவா?"

'பார்கவியும், அதிதியும் இந்தியாவை விட்டுப் பறந்தாயிற்று! எந்த நாட்டுக்குப் போனார்கள் என்று தேடச் சொல்! அதற்குள் முப்பது நிமிடங்கள் முடிந்துவிடும். இப்போதே மூன்று வைர நிமிடங்கள் காலி!"

வேகமாக ஐ.பி. டைரக்டரின் அறைக்கு விரைந்தேன். டெல்லி போலிஸுக்குத் தகவல் கொடுத்தோம். மோப்ப நாய்கள், வெடிகுண்டு நிபுணர்கள், ஆம்புலன்ஸ், தீயணைப்பு நிலையம் என்று எங்கும் உத்தரவுகள் பறந்தன.

'மாலின் செக்யூரிட்டி தலைமை அதிகாரி இதோ போனில் இருக்கிறார் சார்."

"நான் கமல்நாத், ஐ.பி.போலீஸ். அவசரம்! உங்கள் மாலில் பாம் வைக்கப்பட்டிருக்கிறது. அது செல்போன் அழைப்பில் இயங்க வைக்கும் பாம்! மாலில் பொருத்தப்பட்டிருக்கும் ஜாமர் கருவியை உடனே ஆக்டிவேட் செய்யுங்கள்.

'அனைவரும் வெளியேறுங்கள், இது ஒரு அவசர ஒத்திகை' என்று மட்டும் அறிவிப்புச் செய்யுங்கள். அத்தனை அவசர வழிகளையும் திறந்து வையுங்கள்!"

சதுர்வேதி கமிஷனர் அலுவலக மீட்டிங்கிற்கு சென்றிருந்த காரணத்தால் என் தலைமையில் குழு புறப்பட, டிரைவரை வேகமாக ஓட்டச் சொல்லி அதட்டினேன். பலமுறை நிருபமாவின் எண்ணை அழைக்க முயன்று தோற்றேன். பானுமதி! நிருபமா! எங்கே இருக்கிறீர்கள்? பாதுகாப்பாக வெளியே வந்துவிட்டீர்களா?

எனக்கு கடவுள் நம்பிக்கை பெரிதாக கிடையாது! பண்டிகை நாட்களில் பானுமதிக்காக

**"மரண பயம் இல்லாதவர்களுக்கு கடவுள் ஒரு அவசியமற்ற ஆசாமி!"**

தீபாராதனை காட்டி, விபூதி வைத்துக் கொள்வேன். கோயில்களுக்குப் போனால் சிற்ப வேலைப்பாடுகளைத்தான் ரசிப்பேன். கதவைத் தட்டி கடவுளுக்காக உண்டியல் நீட்டினால் பத்துப் பைசா தர மாட்டேன்.

எது நடந்தாலும் ஏற்கும் பக்குவமும், எதையும் எதிர்பார்க்காத மனநிலையும், மரணம் பற்றிய பயமும் இல்லாதவர்களுக்கு கடவுள் ஒரு அவசியமற்ற ஆசாமி. அதனால் அவரை நெருங்க விடாமல் ஓரங்கட்டியே வைத்திருந்தேன்.

ஆனால்... அந்த நிமிடம்... மனத்திரையில் வரிசை கட்டி வெங்கடாஜலபதியும், முருகனும், பிள்ளையாரும், அல்லாவும், ஏசுவும், வேளாங்கண்ணி மாதாவும் ஊர்வலமாக வந்தார்கள். உண்மையான பிரார்த்தனை கண்டிப்பாக பலிக்குமாமே!

ஆனால்... ஹிட்லர் லட்சக் கணக்கில் கொன்று குவித்தாரே... அப்போது அந்த யூதர்கள் பிரார்த்தனை செய்திருக்க மாட்டார்களா? உலகப் போர்களின்போது நடப்பது வீடியோ கேம்ஸ், விளையாட்டுச் சண்டை என்று கடவுள் ஏரியல் வியூவில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாரா? இந்த உலகத்தில் எத்தனை சுனாமிகள்! எத்தனை பூகம்பங்கள்! எத்தனை நோய்கள்! எத்தனை ரயில், விமான, பேருந்து விபத்துகள்! அவை கடவுளுக்கு திரைப்பட கிராஃபிக்ஸ் காட்சிகளா என்ன?

பல நிமிடங்கள் மனதில் தர்க்கம்! ஒரே விநாடியில் அத்தனை தர்க்கங்களும் ஏன் என்று புரியாமல் உடைந்துபோய்.... சத்தியமாக நான் பிரார்த்தித்தேன்.

கடவுளே! எதுவும் நிகழக் கூடாது! அந்த பாம் கண்டுபிடிக்கப்பட வேண்டும். அதை செயல்பட விடாமல் தடுத்துவிட்டதாக இப்போது



**‘‘அப்பாடா இப்பவாவது என் மேல உனக்கு லவ் வந்ததே!’’**

**‘‘லூஸு இது என் கல்யாணப் பத்திரிகை!’’‘**

**-அ.ரியாஸ்**

தகவல் வர வேண்டும். ஒரு உயிர் கூட போகக் கூடாது! முக்கியமாக என் பானுமதி! என் நிருபமா!

போன் ஒலித்து கமல்நாத் டைப் செய்வதை தடுத்து நிறுத்தியது. எடுத்தார்.

"கமல் உன் சதுர் பேசுகிறேன்."

"ஹாய் சதுர்! எங்கிருந்து?"

"இந்தியா."

''அட! நிஜமாகவா? நியூயார்க்கிலேயே செட்டிலாகி விட்டேன். இனி எங்கே இந்தியா வரப் போகிறேன் என்றாயே! எப்போது வந்தாய்?"

''இரண்டு நிமிடங்களுக்கு முன்னால், ஏர்போர்ட்டிலிருந்து பேசுகிறேன். என் பையனுக்கு இந்தியாவில் தொழில் துவங்க ஆசை. நூறு கோடியில் ஒரு பெரிய பிஸினெஸ் ப்ரோபோசல் வைத்திருக்கிறான். அது தொடர்பாக வந்திருக்கிறேன். பல அரசியல் வாதிகளைச் சந்திக்க வேண்டும். உன் உதவியும் தேவைப்படும்."

"உத்தரவிடுங்கள், கண்டிப்பாகச் செய்கிறேன்."

"உத்தரவிடடா என்று உரிமையுடன் சொல்லடா. இப்போதுதான் நாம் வேலையில் இல்லையே? நண்பர்கள் மட்டுமே! ஹோட்டல் ஆரண்யாவில் அறை புக் செய்திருக்கிறேன். உன் கை பிடித்து நிறைய பேச வேண்டும். உன்னோடு மது அருந்த வேண்டும். மாலை ஏழு மணிக்கு வருகிறாயா?"

கண்டிப்பாக வருவதாகச் சொல்லி கமல்நாத் போனை வைத்தார். மீண்டும் டைப் செய்யத் துவங்கினார்.

எங்கள் வாகனம் சாளுக்கியா மால் இருக்கிற தெருவில் நுழையும் போது... அந்த வெடிகுண்டு வெடித்தது!

தொலைக்காட்சி கேமராக்கள் லைவாக படம் பிடித்து ஒளிபரப்பிக் கொண்டிருக்க... தீயணைப்புக்




**''போர்டு எழுதின ஆள் மப்புல இருந்திருப்பான் போல...!''**

**-அ.ரியாஸ்**

கருவிகள் தண்ணீரைப் பீய்ச்சியடித்துக் கொண்டிருக்க... கண்ணாடிச் சிதறல்கள்... எரிந்து கரியாகியிருந்த மரச் சாமான்கள், உருகியோடியிருந்த பிளாஸ்டிக் பொருட்கள், சடலங்கள், அரைகுறை சதைப் பிண்டங்கள் நடுவில் பைத்தியம் மாதிரி அலைந்து பானுமதியையும், நிருபமாவையும் தேடினேன்.

இரண்டு மணி நேரத் தேடலுக்குப் பின்... பிறந்த நாளுக்கு நான் வாங்கித் தந்த வாட்ச் கட்டிய அதிகாரியே தன் குடும்பத்தினரை இழந்திருக்கிறார். அவரிடம் பேசலாம். சொல்லுங்கள் மிஸ்டர் கமல்நாத்."

"மன்னிக்கவும் என்னால் பேச முடியவில்லை. என் குடும்பத்தினரை தகனம் செய்யச் செல்ல வேண்டும், அனுமதியுங்கள்."

சோமன் பத்தாண்டு தண்டனையில் ஜெயிலில் அடைக்கப்பட, சதுர்வேதியும், நானும் ஊடகங்களின் வாயை அடைப்பதற்காக பலிகடாக்களாக்கப்பட்டோம்.



கை, என் திருமண நாளுக்கு வாங்கித் தந்த கொலுசு சுமந்த கால் இவற்றை வைத்து நிருபமாவையும், பானுமதியையும் அடையாளம் கண்டு சதைக் குவியல் மூட்டையாகப் பெற்றுக் கொண்டேன்.

பயங்கர நிகழ்வில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அறுபத்து நான்கு என்றது ஒரு சேனல். அறுபத்து எட்டு என்றது ஒன்று. என் மூக்கின் முன் மைக் நீட்டியது ஒரு சேனல்.

"இந்த பயங்கரவாதத்தில் ஒரு ஐபி. சஸ்பெண்ஷன்! விசாரணை! நாங்கள் குற்றமற்றவர்களென்று விசாரணையின் முடிவு சொன்னபோதும் எங்களுக்கு பணியைத் தொடர்வதில் விருப்பமில்லை.

சதுர்வேதி அமெரிக்கா சென்று தன் பிள்ளையோடு செட்டில் ஆனான். நான் வீட்டில் உட்கார்ந்து கொண்டு சுவரில் புகைப்படங்களாகத் தொங்கும் பானுமதி, நிருபமாவையே சதா பார்த்துக் கொண்டிருந்தேன்.

அன்றைய தினம் இறந்தது

பானுமதி, நிருபமா மட்டுமல்ல, கொஞ்சமே கொஞ்சம் எனக்குள் இருந்த கடவுளும் இறந்து போனார். ஏன்? ஏன்? என் உண்மையான பிரார்த்தனைக்கு கடவுள் ஏன் செவி சாய்க்கவில்லை? - இந்தக் கேள்வி மட்டும் என்னைத் துரத்தியடித்தது.

மேற்கொண்டு என்ன டைப் செய்வது என்று யோசித்த கமல்நாத் கடிகாரம் பார்த்து பதறி எழுந்தார். சதுர்வேதி எனக்காகக் காத்திருப்பானே?

சியர்ஸ் சொல்லி கண்ணாடிக் கோப்பைகளை மோதிக் கொண்டு கமல்நாத்தும், சதுர்வேதியும் ஐஸ் கட்டிகள் மிதந்த மதுவைப் பருகத் துவங்கினார்கள்.



**''அரசே! தங்கள் நாட்டில் தண்ணீர்ப் பஞ்சம் கடுமையாக உள்ளதோ...?''**

**''எப்படி கண்டுபிடிச்சீங்க?''**

**''வெண்கொற்றக் குடை இவ்வளவு அழுக்காக இருக்கிறதே...!''**

**-க.மீ.நஜ்முதீன்**

ஒரு மாலை அந்த மடத்தில் உபன்யாசம் செய்த குருஜி நாடிக்குள் சிரித்தபடி சொன்னார், 'மனிதனின் நியாயம் தர்மம் இவற்றுடன் கடவுளை அணுகக் கூடாது. கடவுளின் நியாய, தர்மங்கள் மனிதனுக்குப் புரியாது. அது புரிய வேண்டுமானால் நீ கடவுளாக வேண்டும்!"

நான் எப்படி கடவுளாவது என்று புரியவில்லை.

"உன் மனமாற்றத்திற்காக ஒரு முறை அமெரிக்கா வந்திருக்கலாம் கமல்நாத். எத்தனை முறை அழைத்தேன்!"

"உனக்கு எல்லாம் கிளியராகி விட்டது. ஆனால் என் பாஸ்போர்ட் இன்னும் திருப்பித் தரப்படவில்லை சதுர். ஆனால் உன்னைப் பார்க்கத் தவித்தது நிஜம்."

"இப்போது என்ன செய்கிறாய்?"

'''புத்தகம் எழுதுகிறேன். சோமன் விஷயத்தில் இன்னும் எனக்குப் புரியாத சில விஷயங்கள் உண்டு. என் குடும்பத்தைப் பற்றிய மிகச் சரியான தகவல்கள் சோமனுக்கு எப்படித் தெரியும்? நான் அழைக்காதபோது நான் போன் செய்து பேசியதாக நிருபமா எப்படிச் சொன்னாள்?"

"அவனுக்கு டெல்லியில் ஒரு நெட் வொர்க் இருந்தது கமல்நாத்."

"யோசித்து யோசித்துப் பார்த்தேன் சதுர். என் மனைவிக்கு கர்ப்பப்பை நீக்கப்பட்டதை உன்னிடம் மட்டும்தான் பகிர்ந்து கொண்டேன். என் மகள் ராம்குமாரை காதலிப்பதையும் உன்னைத் தவிர யாரிடமும் பேசியதில்லை. கல்லூரி நாட்களில் நீ என் குரலில் உன் அப்பாவிடம் பேசி டூர் போக பர்மிஷன் வாங்கியது நினைவு வந்தது. ஆமாம், நூறு கோடியில் ப்ராஜக்ட் உன் மகனா துவங்கப் போகிறான்?"

கமல்நாத் எழுந்து கொண்டு அவசரமாக பிஸ்டல் எடுத்து சதுர்வேதியின் நெஞ்சை நோக்கி குறி வைத்தார்.

சதுர்வேதி வெளிறிப்போய் "நோ! நோ! உனக்கு பாதி கொடுத்துவிடுகிறேன். என்னைக் கொன்றுவிடாதே! ப்ளீஸ்" என்றான்.

''சரியோ, தவறோ.... பயங்கரவாதம் செய்வது பயங்கரவாதியின் கடமை! அதைத் தடுக்க வேண்டிய கடமையில் இருக்கும் நீ கோடிகளுக்காக அவனோடு கூட்டு சேர்ந்தாயே... நீதானடா அவனை விட பெரிய பயங்கரவாதி! கடமைக்கு துரோகம்! நட்புக்கும் துரோகம்! மனிதனாடா நீ? ச்சீ!"

எட்டு ரவுண்டுகள் சுட்டார் கமல்நாத். பிறகு போலீஸை அழைத்தார்.

ஜீப்பில் செல்லும்போது தெருவெல்லாம் கூட்டம் அலை மோதியது. கிருஷ்ணர் பல்லக்கில் வந்தார்! அன்று கிருஷ்ணஜெயந்தி! கடவுள் பிறந்த தினம்! அல்லது கடவுளின் கடமையான தீமையை அழிப்பதைத் தன் கையில் எடுத்ததால்... கமல்நாத் கடவுளான தினம்!

**(கதை முடியட்டும்! சம்பவங்கள் தொடர வேண்டாம்!)**●

**4 அடுத்த வாரத் தொடர் எழுதுபவர்**

**தேவிபாலா**

